


**23. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரசு வேலை வாய்ப்புகள் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொ◌ிவித்துள்ளார்.

2. உள் கட்டமைப்பு வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாடு மிக விரைவான வளர்ச்சி கண்டுவருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. திருக்கோவில்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

4. நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தொ◌ிவித்துள்ளது.

5. ஐ.பி.எல் 20-20 கி◌ா◌ிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்று இரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் – பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இனி வி◌ா◌ிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியாவின் வளர்ச்சிப்பாதையில் பல்வேறு உலக நாடுகள் பங்கேற்க விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொ◌ிவித்துள்ளார்.

19-ம் கட்ட ரோஜ்கர் மேளா சிறப்பு வேலை வாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு புதுதில்லியிலிருந்து காணொலி மூலம் பணி ஆணைகளை வழங்கி உரையாற்றிய அவர், மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரசு வேலைவாய்ப்புகள் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

இளையோர் தங்களுக்கான வாய்ப்புகளை செம்மையாக பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

அண்மையில் தாம் மேற்கொண்ட 5 நாடுகள் பயணத்தின் போது, அந்நாடுகளின் முன்னணி தொழில்துறை வல்லுநர்களுடன் ஆலோசனை மேற்கொண்டதில், திறன்மிகு இந்திய இளைஞர்களின் உலகளாவிய தேவை அதிகரித்துள்ளதாக பிரதமர் கூறினார்.

சென்னை பெரம்பூர் ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலை வளாகத்தில் இளையோருக்கு பணி ஆணைகளை வழங்கி பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிரதமர் திரு. நரேந்திரமோடியின் உத்தரவாதத்திற்கு ஏற்ப இதுவரை 12 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு மத்திய அரசு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

தேசக்கட்டமைப்பில் பொறுப்புடன் இளையோர் பணியாற்ற வேண்டுமென கேட்டுக் கொண்ட அவர், இதற்காக கர்மயோகி திட்டம் செயல்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் மக்கள் நலன்சார்ந்த மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அனைவரும் அறிந்து கொள்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர், பெரம்பூர் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரயில் பெட்டிகள் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக எடுத்துரைத்தார்.

வந்தே பாரத் ரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதற்கு பாராட்டு தொ◌ிவித்த அமைச்சர், மும்பை, அஹமதாபாத், சென்னை, பெங்களுரு மற்றும் ஹைதராபாத் வழித்தடங்களில் புல்லட் ரயில் சேவைகள் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையில், கட்டுமானம், மின்னணுமயம், எளிதான வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்புகளில் நாடு மிக விரைவான வளர்ச்சி கண்டுவருவதாக அமைச்சர் பெருமிதம் தொ◌ிவித்தார்.

அமைச்சரிடமிருந்து பணி நியமன ஆணையை பெற்றுக் கொண்டவர் மத்திய அரசுக்கு நன்றி தொிவித்து பேசுகையில்

.. வாய்ஸ் ..

நாடுமுழுவதும் 47 இடங்களில் இன்று நடைபெற்ற ரோஜ்கர் மேளா நிகழ்ச்சியில் ரயில்வே, உள்துறை, சுகாதாரம், பொதுத்துறை வங்கிகள், உயர்க்கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில்,

51 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖

மார்க்கோ ரூபியோ

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்க்கோ ரூபியோ, பிரதமர் திரு. நரேந்திரமோடியை புதுதில்லியில் இன்று பிற்பகல் நேரில் சந்தித்து முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா அமொிக்கா இடையே வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனைகளை மேற்கொள்ளும் அவர், குவாட் பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளுக்கான செயல் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கிறார்.

நாளை மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை சந்திக்கும் மார்க் ரூபியோ, புதுதில்லியில் உள்ள அமெரிக்க துணை தூதரகத்தில் நடைபெறும் சுதந்திர தின நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.

இந்தியாவின் தலைமையில் நடைபெறவுள்ள குவாட் உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக இந்திய பசிபிக் பிராந்தியத்தில் தடையற்ற வெளிப்படையான நடவடிக்கைகள், பரஸ்பர மற்றும் உலகளாவிய நலன்சார்ந்த செயல்திட்டங்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்படும்.

முன்னதாக 4 நாள் பயணமாக இன்று கொல்கத்தா வந்தடைந்த மார்க் ரூபியோவை, இந்தியாவிற்கான அமொிக்க தூதர் செரிகோ கார்க் வரவேற்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங்

வேளாண் துறையில் திறன் மற்றும் வெளிப்படை தன்மையை அதிகரிக்க செயற்கை நுண்ணறிவு, மின்னணு

தொழில்நுட்பம் வழிகோலுவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வேளாண் துறை உயரதிகாரிகளுடன் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஊரக வளர்ச்சி, நில வள மேலாண்மை தொடர்பான ஆக்கப்பூர்வமான செயல்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

தமிழக திருக்கோவில்களில் பொதுமக்கள் சிரமமின்றி தரிசனம் செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப்படும் என மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பேரரசர் பெருமிடுகு முத்தரையரின் சதயவிழாவை முன்னிட்டு திருச்சியில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு இன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், திருக்கோவில்களுக்கு சொந்தமான சொத்துக்களை மீட்கப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் அறுவை செய்யப்பட்ட செவிலியர் கல்லூரி மாணவி உயிாிழந்தது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தனிக்குழு அமைக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் திரு. ரமேஷ் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

விஜய் பாலாஜி

ஈரோட்டில் பொதுமக்களின் வசதியை கருத்தில் கொண்டு நகரின் மையப்பகுதியிலேயே சந்தை தொடர்ந்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப்படும் என மாநில கைத்தறி மற்றும் ஜவுளித்தறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தொிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பகுதியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டிற்கு வராமல் உள்ள கடைகள் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சம்பத் குமார்

கோவையில் 10 வயது சிறுமி உயிா◌ிழந்த சம்பவத்தில் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தர அரசு உறுதியுடன் செயல்படும் என மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார் தொ◌ிவித்துள்ளார்.

சிறுமியின் பெற்றோரை நேரில் சந்தித்து ஆறுதல் தொ◌ிவித்த பின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இவ்வழக்கில் காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளை கைது செய்துள்ளதாக கூறினார்.

குற்ற செயல்களை தடுக்க, கண்காணிப்பு பணிகள் பலப்படுத்தப்படும் என கூறியஅவர், சிங்கப்பெண்கள் திட்ம் வரும்
27-ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மாற்றுப்பணிகள்

தமிழகத்தில் மூடப்பட்ட டாஸ்மாக் மதுபானக் கடைகளில் பணியாற்றிய ஊழியர்களுக்கு மாற்றுப்பணிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

முதல்கட்டமாக 500 பேருக்கு பணி மூப்பு அடிப்படையில் மாற்றுப்பணி வழங்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் உரிய பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றாத பள்ளி வாகனங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு. பிரதாப் எச்சரித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் உயர்கல்வி வழிகாட்டி கட்டுப்பாட்டு அறையை மாணாக்கர் பயன்படுத்தி ஆலோசனைகள் மற்றும் உதவிகளை பெறலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. துர்கா மூர்த்தி தொ◌ிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்வதற்கு வரும் 3-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு. ரத்தினசாமி தொிவித்துள்ளார்.

வீர தீர செயலுக்கான கல்பனா சாவ்லா விருது பெற விரும்பும் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த தகுதியுடைய மகளிர் அடுத்த மாதம் 19-ம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மிருனாளினி தொிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் மீன்களின் வரத்து குறைந்துள்ளதை அடுத்து மீன்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதாக எமது செய்தியாளர் தொிவித்துள்ளார்.

இதனிடையே நாகை கடற்பகுதியில் பலத்த சூறாவளி காற்று வீசுவதால் மீனவர்கள் 5-வது நாளாக இன்றும் கடலுக்கு செல்லவில்லை.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

அரபிக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல சுழற்சி மற்றும் கேரளம், குமரிக்கடல் வழியாக நிலவும் காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக நீலகிரி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, நாமக்கல் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தொிவித்துள்ளது.

இதனிடையே தென்மேற்கு, தென் கிழக்கு, மத்திய கிழக்கு வங்கக்கடல், அந்தமான் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை முன்னேறியுள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிாிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிாிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்று இரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் – பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

புள்ளிகள் பட்டியலில் தலா 18 புள்ளிகளுடன் முறையே ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு, குஜராத் டைட்டன்ஸ், சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் முதல் 3 இடங்களில் உள்ளன.

14 புள்ளிகளுடன் ராஜஸ்தான் ராயல்ஸ் 4-வது இடத்தில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖